# NEWSPAPER CLIPPINGS

| MEDIA | TAMIL MALAR | DATE | 23 OCT 2013 (TUES) |
| --- | --- | --- | --- |
| PAGE / SECTION | 7 / CITY NEWS | READERSHIP | 80,000 |


# தாதியர்களின் சேவை நிகரற்றது


(என்.சீலன்,
படம்.ரெ.ஆ.குமரா)


சுபாங் ஜெயா, அக்.23– இரவு பகல் எனப் பாராமல் எந்நேரமும் நோயாளிகளை அன்பால் அரவணைத்து அவர்களுக்கு தேவைப்படுவதை எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி ஏற்படுத்திக் கொடுக்கும் தாதியர்களின் சேவை ஒப்பற்றது.

அனைவராலும் தாதியர்களாக முடியாது. பொறுமை, சுயகட்டுப்பாடு, இரக்க குணம் கொண்டவர்களாலேயே தாதியர் துறையில் நிலைத்திருக்க முடியும். அது மட்டுமல்லாமல் திருமணமான தாதியர்கள் தங்களின் குடும்ப வாழ்க்கையை சற்று தியாகம் செய்ய நேரிடும்.



சுமதி சுப்பிரமணியம்

மருத்துவமனையிலிருந்து எந்நேரம் அழைப்பு வந்தாலும் உடனடியாக சென்றாக வேண்டும். இப்படி பல நிகரற்ற தியாகங் களை செய்யும் தாதியர்களை கௌரவிப்பது சமூகத்தின் கடப்பாடாகும் என பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப்பின் தலைவர் எச்.எஸ்.தரன் கூறினார்.

அக்டோபர் மாதம் ரோட்டரி கிளப்பிற்கு பிரதான மாதமாகும். இம்மாதம் தொழில்முறை மாதமாக உலகளவில் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே, இம்முறை தாதியர்களை சிறப்புச் செய்து கௌரவிக்க பெட்டாலிங் ரோட்டரி கிளப் முன்வந்துள்ளது.

அதன் அடிப்படையில் நேற்று சுபாங் ஜெயா டோர்செட் தங்கும் விடுதியில் நடைபெற்ற நிகழ்வில் ஐந்து தாதியர்கள் சிறப்பு செய்யப்பட்டனர். மருத்துவமனை அதிகாரிகள், நோயாளிகள் மூலம் சிறப்பான முறையில் சேவையாற்றிய ஐந்து தாதியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் பரிசையும் நற்சான்றிதழையும் வழங்கி கௌர வித்தது.

சிலாங்கூரில் செயல்பட்டுவரும் அரசாங்க சார்பற்ற மருத்துவ நிலையமான தேசிய சிறுநீரக அறவாரியம், மலேசிய சென்.ஜோன் ஆம்புலன்ஸ் கழகம், எம்.ஏ.ஏ. மெடிக்கேர் ஆகிய இடங்களில் பணிபுரியும் சித்தி பாத்திமா பாசிர், ரோஸ்மா பிந்தி முகமது சாயிட், ஹாஸ்லினா பிந்தி ஹெல்மி உள்பட இந்தியப் பெண்மணியான சுமதி சுப்பிரமணியம் சிறந்த தாதியர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

முறையான விழிப்புணர்வு இல்லாத பட்சத்தில் சிறுநீரக நோயால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 2011–2012 ஆண்டுகளில் நாடு தழுவிய நிலையில் 25,688 பேருக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வெண்ணிக்கையை குறைக்க பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரம் நாடு தழுவிய நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என எச்.எஸ்.தரன் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறினார்.



## விடாமுயற்சி பயனளித்தது

தாதியராக வேண்டும் என்பது எனது இலட்சியக் கனவாகும். வறுமையான குடும்பத்தில் பிறந்த எனக்கு தாதியருக்கான உயர்கல்வி மேற்கொள்வதற்கு வசதியில்லை. இருப்பினும் எனது இலட்சியத்தை கைவிடவில்லை.

பல்வேறு இன்னல்களை சந்தித்த பிறகு மாஸ்டர்ஸ்கில் தாதிமை கல்லூரியில் இணைந்தேன். மூன்று வருடம் அங்கு பயின்ற என்னால் கல்லூரியின் கட்டணத்தை செலுத்த இயலவில்லை. இதனால் இறுதித் தேர்வு எழுத தடைவிதிக்கப்பட்டது.

மனம் தளராமல் இலட்சியத்தை முன்வைத்துப் போராடினேன். அதற்கு பலன் கிடைத்தது. டான்ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணனின் எம்.சி.எப் அறவாரியம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனக்கு உபகாரச்சம்பளம் வழங்கியது.

சிறப்பான தேர்ச்சி பெற்ற நான் கிள்ளான் சென்.ஜோன் மருத்துவ நிலையத்தில் தலைமைத் தாதியராக நியமிக்கப்பட்டேன்.

ஏழு ஆண்டுகளாக இங்கு பணியாற்றும் எனக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது பெரும் அங்கீகாரமாக அமைந்துள்ளதாக பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறந்த தாதியருக்கான விருது பெற்ற சுமதி சுப்பிரமணியம் கூறினார்.